## <u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 391/2017

அரசுதரப்பு 4-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ் | வயது | : | 46 |
| தந்தை/கணவர் பெயர் | : | ராமமூர்த்தி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

சட்டம் 44/1969-ன் விதிமுறைகளின் படி 04.10.2021 -ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது புத்தூர் கிராமம் சீர்காழி தாலுக்காவில் வசிக்கிறேன். என்னுடைய நிரந்தரமான ஊர் பெரம்பூர். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ்சாட்சியாக மாறியதால் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் கடந்த 03.05.2014 காலை 10.30 மணிக்கு நான் மாரியப்பா நகரில் குடியிருக்கும் வீட்டின் கீழே உள்ள போர்ஷனில் பலத்த வெடி சத்தம் கேட்டது என்றும், வெடிசத்தம் கேட்டதும் நானும், சுரேஷ் என்பவரும், நெடுமாறன் என்பவரும் சத்தம் கேட்ட ரூமிற்கு சென்று பார்த்தோம் என்றும், அறை

முழுவதும் இரத்த சிதறல்களுடன், வெடிமருந்து பால்ரஸ்கள், ஜன்னல் கண்ணாடி உடைந்து சிதறி கிடந்தது என்றும், அறையின் மேற்கு பக்க சுவர் விரிசல் கொண்டிருந்தது என்றும், மக்கள் குண்டு வெடித்து விட்டது என்று கத்தி கொண்டு அங்குமிங்கும் ஓடி கொண்டிருந்தார்கள் என்றும், அறையில் 4 வீச்சருவாள், ஒரு பிஸ்டல், ஒரு இரும்பு ராடு, ஒரு கறி வெட்டும் கத்தி, பயன்படுத்திய மற்றும் பயன்படுத்தாத தோட்டாக்கள், ஒரு பிச்சுவா கத்தி, அருள்பிரசாத் என்பவரின் ஐடி கார்டு, மோகன்ராம், சங்கர்லால் ஆகியோரது பான்கார்டு, ராஜேஷ்கண்ணன் என்பவரின் பார்கவுன்சில் ஐடி கார்டு, பாஸ்கரன் என்பவரின் ஓட்டர் ஐடி ஆகியவைகள் கிடந்தன என்றும், அப்போது அந்த அறையில் குண்டு வெடித்ததில் மோகன்ராம்மிற்கு அடிப்பட்டது என்றும், வழி்யில் அந்த பக்கம்போன ஆட்டோவில் அடிபட்ட மோகன்ராமை அவர் நண்பர்கள் அருள்பிரசாத், சுரேந்தர், சத்யா, சந்தோஷ், பட்டாபி ஆகியோர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 391/2017

அரசுதரப்பு 5-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சௌந்தர்ராஜன் | வயது | : | 62 |
| தந்தை/கணவர் பெயர் | : | சந்திரகாசு | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

சட்டம் 44/1969-ன் விதிமுறைகளின் படி 04.10.2021-ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் வருவாய்துறையில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி ஓய்வு பெற்று விட்டேன். வழக்கு காலத்தில் சி.கொத்தங்குடியில் கிராம நிர்வாக அலுவலராக இருந்தேன். மேலும் குருவகுளம் கிராம நிர்வாக அலுவலர் பொறுப்பில் இருந்தேன். அண்ணாமலை நகர் காவல்நிலையத்திலிருந்து போன் செய்தார்கள். 2014 ஆம் வருடம் 5 வது மாதம் வழக்கு சம்மந்தமாக விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. கையெழுத்து போடவேண்டும் என்று சொன்னார்கள். அருள்பிரசாத் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அது அசாஆ. 5 ஆகும். எதிரி சந்தோஷ் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அது அசாஆ. 6 ஆகும். என் முன்னால் எதுவும் கைப்பற்றவில்லை. 13.05.2014 கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 06.05.2014 கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்துகள் அசாஆ. 7 மற்றும் 8 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ்சாட்சியாக மாறியதால் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் கடந்த 09.06.2014 ஆம் தேதி இந்த வழக்கில் எதிரியான மோகன்ராம் என்பவரை அம்மன்கோயில் பைபாஸில் உள்ள பெட்ரோல் பங்க் அருகில் காவல் ஆய்வாளர் கைது செய்து விசாரிக்கும்போது சாட்சியாக என்னையும், எனது உதவியாளர் தங்கதுரையையும் இருக்க சொன்னதின்பேரில் நானும், எனது உதவியாளரும் போலிசார் தயார் செய்த ஆவணத்தில் கையெழுத்து செய்தோம் என்றும், 06.05.2014 அன்று எதிரி அருள்பிரசாத்தை கைது செய்து ராஜேந்திரன் சிலை அருகே அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எனது உதவியாளரும் கையெழுத்து செய்தோம், என்றும், பின்னிட்டு 07.05.2014 அன்று வடக்கிருப்பு போஸ்ட் ஆபிஸ் அருகே எதிரிகள் சந்தோஷ், பட்டாபி ஆகியோர் அளித்த ஒப்புத்ல் வாக்குமூலத்தில் நானும் எனது உதவியாளரும் கையெழுத்து செய்தோம் என்றும், 06.05.2014 , 13.05.2014 ல் எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் நானும் எனது உதவியாளரும் கையெழுத் து செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.